

# ஒரு கவிதை எழுதிவிட

அ. கௌரிதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு
# கவிதை
# எழுதிவிட...

அ.கௌரிதாசன்

PENA PUBLICATION

**வெளியீடு**
பேனா பப்ளிகேஷன் - கிண்ணியா
Mobile: +94 779300397
Email: firosmi.pena@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒரு கவிதை எழுதிவிட..."

◆விடயம்: கவிதை, ◆ஆசிரியர்: அ. கௌரிதாசன், ◆முகவரி: வள்ளுவர் வீதி, ஆலங்கேணி கிழக்கு, கிண்ணியா, இலங்கை., ◆பதிப்புரிமை: மோகனேஸ்வரி கௌரிதாசன் (077 624 9786, 075 2025 786), ◆வெளியீடு: பேனா பப்ளிகேஷன், ◆தளக்கோலமும் அட்டையும்: அம்ரா க்ரபிக்ஸ், கிண்ணியா ◆முதற் பதிப்பு: 2014, ◆பிரதிகள்: 500, ◆ISBN: 978-955-42023-0-6 ◆விலை: 300/-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது...,

"என்பெயரில் சரி பாதி
எனதில்லாள் பெயர் பாதி
தன்பெயராய் அலங்க ரித்து
தாளாநல் மகிழ்வ ளித்து,
மன்பதையை விடுத்தே வான்
மகிபனவன் உல கேற்ற -
அன்பு மகன் **மோகன னுக்கு**
அர்ப்பணித்தேன் இந்நூலை!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

**பேனா பப்ளிகேஷனின்**

**16வது வெளியீடு...**

மனிதனின் உள்ளம் மிக்க விசித்திரமானது அழுகை, சிரிப்பு, கஷ்டம், துன்பம் என உணர்ச்சி நிலைகள் மாறி மாறி வருகையில் சந்தோசம் கானல் நீராய் கணத்தோற்றத்தில் மறைந்து போய்விடுகிறது.

துயரமோ எம்முள் இறங்கி உயிரில் கலந்து நீண்ட தூரம் பயணிக்கும்ஆறாத காயமாய் உறைந்து கிடக்கும். அத்தகைய நிலையில் எழுதித் தீர்த்த மிகவும் அற்புதமான,ஆழமான கருத்தியலை மரபின் அக வெளி இரு நிலையில் எழுதி வடித்த கவிதைகளை தூக்கிக் கொண்டு எம்மிடம் வந்தார், கவிமணி அ.கௌரிதாசன் அவர்கள் "ஒரு கவிதை எழுதி விட..." எனும் நாமத்துடன்.

இந்த "ஒரு கவிதை எழுதிவிட...",கவிதைத் தொகுப்பு கவிஞரின் மூன்றாவது நூல். எமது பேனா பதிப்பகத்தின் பதினாறாவது வெளியீடு என்பதிலும் நாங்கள் உற்சாகப் பெருமிதம் அடைகின்றோம். கடந்தகால எமது அனைத்து வெளியீடுகளையும் மிகவும் நேசிப்போடு ரசித்த கவிஞர் அவர்கள் தன் கவிதைத் தொகுப்பையும் எமது வெளியீடாக கொண்டுவரவிரும்பியமைக்கு அவருக்கும் அவரது குடும்பத் தாருக்கும் நன்றி. மகிழ்ச்சி.

**ஜே.பிரோஸ்கான்**
**பணிப்பாளர்,**
**பேனா பப்ளிகேஷன்,பேனா இலக்கியப் பேரவை,**
**கிண்ணியா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

## “மொழிப்படகு ஏற்றிக்கொண்ட மூன்றாவது தொகுதி”

கிண்ணியா நகரை அண்மித்து அமைந்த ஆலங்கேணி என்னும் அழகிய தமிழ்க் கிராமத்தைத் தனது வாழ்விடமாகக் கொண்டவர்தாம் கவிமணி அம்பலவாணர் கௌரிதாசன் தன்னரும் பாட்டுத் திறத்தால் இவ்வூருக்குப் புகழை ஈட்டித் தருபவர்.

1970 களில் பத்திரிகை ஜாம்பவான் அமரர் எஸ்.டீ. சிவநாயகம் அவர்கள் கண்டெடுத்த கவிஞன்தாம் அம். கௌரிதாசன். சிவநாயகம் அவர்களின் சிந்தாமணிப் பண்ணையில் வளர்ந்த மரபுக் கவிஞர்களுள் கௌரிதாசன் குறிப்பிட்டுக் கூறத்தக்கவராவார்.

இவர் கவிஞனென்ற அங்கீகாரத்தைத் தக்கவைத்துக் கொண்டு எழுதுபவர். ஆதலால், சப்பென்று இவர் கவிதைகள் எப்போதும் மொட்டைக் கூற்றாக இருந்ததில்லை. கவிதைக் குரிய அழகியல் அம்சங்கள் அனைத்தும் அப்(Up)பென்று உயரத்தையே எட்டிப் பிடித்திருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலழகைப் பாடுவார். தனது அனுபவச் சுவடு-களைப் பனுவல்களாக்கி அள்ளிப் போடுவார். ஆனால், அக்கவிதைகளில் "Romantic" என்னும் மிகையான கற்பனை இராது; வெறும் ஒப்பனை இராது. வீச்சிருக்கும் கவிதைக் கான பேச்சிருக்கும். அத்தகைய பனுவல்களை இந்நூற் திரட்டில் படித்துச் சுவைக்கலாம். இத்தொகுப்பிலுள்ள எல்லாப் பாவடிகளும் எடுத்துக் காட்டுக்கு ஏற்றவைதாம்.

இதோ, "கச்சான் படுத்தும் பாடு" என்னும் பாவில் கவிஞரின் உணர்ச்சியும் சொற்களும் ஒன்றெனக் கலந்து கவிதைக்கு உயர்வூட்டியிருக்கும் அழகு பாராட்டத்தக்கதே.

"வீதிகளில் கூளங்கள் பரப்பி வைக்கும்
வீட்டுக்குள் தூசுகளை நிரப்பி வைக்கும்
சாதி மதம் இனமென்று பாரா வண்ணம்
சகம் வாழும் சகலரையும் சமனாய் எண்ணும்"

கவிஞர் கௌரிதாசனின் கவிதை மொழியில் அவர் பாடற்குத் தேர்ந்த கச்சாப்பொருட்கள் யாவும் கலைநயம் பெருகும் கவிதைகளாக உருவெடுத்துள்ளன.

எண்சீர், அறுசீர், கண்ணி, சிந்தென்று மரபு வழிகளைக் கையகப்படுத்தியுள்ள கவிஞர் காணும் பொருட்களிலெல் லாம் கவிதையைத் தரிசிக்கின்றார். அத் தரிசிப்பில் "வீட்டோர நாவல் மரம்" ஒன்று கவிதையாகின்றது. நாவல் மரம் தரும் பயன்கள் பற்றிப் பேசுகின்றார். அம்மரத்தை வெட்டி வீழ்த்தி சித்தப்பா கடை கட்டப் போகும் செய்தி கவிஞரைக்கவலைக்குள்ளாக்குகின்றது. அக்கவலைகவிதை யாகின்றது.

"சித்தப்பா மரத்தை வெட்டிச்
சிறியதொரு கடை கட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தமுடன் இருப்ப தென்று
செய்தியொன்று கசிகிறது!
நடப்பாண்டில் பழம் சொரியும்
நாவல் மரம் நாம் காண-
அடுத்தாண்டில் இருக்காதாம்
அதை நினைத்துப் பெருங் கவலை!"

கவிஞன் என்பவன் மனிதர் மீது மட்டுமல்ல, மரஞ்செடி, கொடி, ஜீவராசிகள் அனைத்தின் மீதும் நேயமுள்ளவன் பாரி தன்தேரையே முல்லைக்கீந்ததும் மனித நேயந்தான். பாரி ஓரரசன். இவர் கவிஞரல்லவா? கவிதை உள்ளம் மிகுந் வரல்லவா? நாவல் தறிக்கப்படப் போகும் செய்தி நறுக் கென்று குத்திற்று. கவலை, கவிதைக் கனியாக முற்றிற்று.

தனது மரபுப் பாக்களால் தமிழுக்குச் செழுமை சேர்க்க விழையும் கவிஞர் கௌரிதாசனின் முதற் கவிதைத் தொகுதி "கௌரிதாசன் கவிதைகள்." இத்தொகுதி வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சினால் 1996ம் ஆண்டில் வெளியிடப்பட்டது.

"மழலைப்பா" என்னும் சிறுவர் பாடல் தொகுப்பு கவி ஞரது இரண்டாவது நூலாக மோகன வெளியீடாக 2003ம் ஆண்டு வெளிவந்தது.

நீண்ட இடைவெளிக்குப் பின்னர்தான் மூன்றாவது கவிதைத் தொகுதியை இலக்கிய உலகுக்குத் தரும் சாத்தியம் கிடைத்துள்ளது.

"வருந்தி யழைத்தாலும் வராது வாரா
பொருந்துவன போமி னென்றாற் போகா"

இக்கூற்றுக்கேற்ப காலமும் நேரமும் பொருந்தியிருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறது. அதனால், இத் தொகுப்பு பூத்திருக்கிறது.

தினமும் கவிதையோடு உறவாடி அவ்வுறவின்ஊடாக வாசகர்களுடன் உரையாடி மகிழும் கவிஞர் கவிதை இலக்கியப் போட்டிகளில் கலந்து தேசிய, சர்வதேச மட்டங்களில் பல பரிசுகளையும், விருதுகளையும் வென்றவர். கவிதைப் பட்டறைகளில் வளவாளராகப் பங்குகொண்டு தன்திறன் காட்டியவர். கவிதைக்கலை சம்பந்தமான அறிவை ஊட்டியவர்.

கௌரிதாசனின் கவிதைமொழி கம்பீரமானது. எளிய நடை, இனிமையான சொற்சேர்க்கை, முருகுணர்ச்சி கொண்டது. "தெளிந்த நீரினுள் தெரியும் நிலம்போல" ஒவ்வொரு கவிதைக்கு ஊடாகவும் தெரிபடுகின்றது கவிஞரின் கவிதை வளம்.

இத்தகு யோக்கியதாம்சங்கள் கொண்ட கவிஞரின் மொழிப்படகுமூன்றாம்தொகுப்பையும்ஏற்றிக்கொண்டது. அப்பாத்திரட்டில் நன்கு படித்துச் சுவைக்கக்கூடிய நல்ல கவிதைகளாக நாற்பது கவிதைகள் இடம்பிடித்துள்ளன.

"கவிதையென்பது ஒரு படைப்பு. ஒரு பூவைப்போல மலர வேண்டும். கண்ணீர்த்துளியைப்போல உணர்ச்சிகளில் தானே சுரக்க வேண்டும்" என்று கவிதை பற்றிக் கவிக்கோ அப்துல் றகுமான் கூறிய கருத்தினைக் கௌரிதாசனின் கவிதைகளும் நிரூபிக்கின்றன.

கவிஞர்க்கென் வாழ்த்து; வளர்க மேலும் அவர்தம் கவிவளம்.

**கலாபூஷணம் ஏ.எம்.எம். அலி**
**கிண்ணியா**
**17.11.2014**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எ(மு)ன்னுரை

பதினொரு வருடகால இடைவெளியின் பின்னர் "ஒரு கவிதை எழுதிவிட..." என்னும் கவிதை நூல் வெளிவருகிறது.

புதுக்கவிதை, வசன கவிதை, நவீன கவிதை, பின் நவீனத்துவக் கவிதை, குறும்பாக்கள் என்றெல்லாம் பல்வேறு பரிணாமங்களில் புற்றீசல்போல கவிதைப் புத்தகங்கள் வெளிவரும் இக்கால கட்டத்தில் எனது கவிதை நூல் தனி மரபுக் கவிதைகளைத் தாங்கி வருகிறது.

இக்கவிதைகள் அனைத்தும் அவ்வப்போது தேசிய, நாள், வார இதழ்களிலும் திங்கள், முத்திங்கள் சஞ்சிகைகளிலும் வெளிவந்தவைதான்.

வாசகர்கள் பலரகம், அவர்களின் ரசனைகள் பலவிதம். இவற்றையும் ஒருகணம் நினைத்து, சீர்தூக்கி இக்கவிதைகளைத் தேர்ந்து நூலாக்க முயன்றிருக்கிறேன்.

இயற்கை, காதல், சமூகம், ஆன்மீகமென்று இந்தக் கவிதைகள் உங்களோடு பேசும். எனக்குச் சரியெனப்பட்டதை தலைசரியாது சத்தியத்தோடு உருக்கொடுத்த கவிதைகளே அநேகமானவை என்பது சத்தியம்.

ஒரு எழுத்தாளன் வாழ்ந்தகாலை அவனது உள்ளத்தைத் தொட்ட விடயங்கள், தரிசனங்கள், தாக்கங்கள், தனது அனுபவங்கள் அனைத்துமே அவனது படைப்பின் கருப் பொருளாகி விடுவது விசித்திரமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தாளன் கற்பனை சிறிது கலந்து ஒப்பனை செய்வதும் அவன் சிந்தனையின் பாற்பட்டதென்றே செப்ப விழைகிறேன்.

இக்கவிதை நூல் வெளிவர வேண்டுமென்பதில் அதீத அக்கறையோடு ஆலோசனை வழங்கிய எனது இலக்கிய நண்பர்கள், குடும்பப் பொறுப்புக்களைக் கரிசனையோடு ஏற்று எழுத்துப்பணி இடையறாது தொடர ஊக்கமளித்த எனது அன்பு மனைவி, எழுத்துப் பிழைகள் ஏற்படா வண்ணம் செவ்வை பார்த்துதவிய எனது மழலைகள் மோகனா, மீரா, தர்சினி இவர்களோடு, நூலுக்கான அணிந்துரை வழங்கிய எனதன்புப் பாங்கன் கலாபூஷணம் ஏ.எம்.எம். அலி, பின் அட்டையில் என்னைப் பற்றிய பதிவுகளை எழுதி வழங்கிய எழுத்தாளரும், விமர்சகருமான நட்புக்குரிய நல்லவர் நந்தினி சேவியர், நேர்த்தியாக அட்டையினை வடிவமைத்து நூலை அழகாக வெளியிட உதவிய பேனா பப்ளிகேஷன் பணிப்பாளர் தம்பி ஜே. பிரோஸ்கான் அனைவருக்கும் இதயம் கனிந்து நன்றி மலர்களைத் தூவுகிறேன்.

என் எழுத்துக்களை வாஞ்சையோடு படிக்கும் இனிய வாசகர்களிடம் இந்நூலின் குறைநிறைகளைச் சுட்டி எழுதுமாறு வேண்டிக் கொள்கின்றேன்.

உங்கள் உயரிய கருத்துக்கள் எனது எதிர்கால எழுத்துலகப் பிரசவங்களுக்கு உரமூட்டி வழிநடத்திச் செல்லுமென்ற குன்றாத நம்பிக்கையோடும், பணிவோடும் விடை பெறுகிறேன்.

**அன்புடன்,**
**அ. கௌரிதாசன்**
**15.10.2014**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிஞன்!

உண்மைக்கு மதிப்பளிக்கும் உயர்ந்த நல்ல
உள்ளத்தைப் பெற்றவனே கவிஞன்! பாரில்
பெண்மைக்கும் சமவுரிமை வேண்டு மென்றே
பெருமையுடன் பேசுபவன் கவிஞன்! நாளும்
பண்ணார்ந்த பாட்டாலே மனித நேயம் -
பாலிக்க விதைதூவும் கவிஞன்! வாழ்ந்து
கண்மூடும் வரையிலுமே வர்க்க பேதம்
கடந்தேதான் வாழுமிவன் கவிஞன் ஆவான்!

அடக்குமுறை அதிகாரம் கண்டே அஞ்சி
அடிவருடி வாழாதான் கவிஞன்! வேள்வி
தொடக்குகின்ற கோளரியே கவிஞன்! பாரில்
தொன்றுதொட்டு வரும்மூடக் கொள்கை யாவும் -
முடக்குகின்ற பகுத்தறிவைச் சொல்ல வல்ல
முன்னணியில் திகழ்பவனே கவிஞன்! நெஞ்சில்
விடங்கொண்டு நாவாலே தேனைப் பெய்யும்
வித்தைதனை அறியாதான் கவிஞன் ஆவான்!

அ.கௌரிதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசைகின்ற மலர்ச்செடிகள் அழகைக் கண்டு
அகமகிழும் ஆத்மாவே கவிஞன்! காற்றின்
இசையோடு இசைகின்ற இதயத் தோனாய்
இயற்கையொடு மதிப்பவனே கவிஞன்! எந்த
வசைகண்டும் வாடாத வதனம் கொண்ட
வண்ணமுள்ள வார்ப்பாவான் கவிஞன்! எட்டுத் -
திசையினிலும் தன்பாடல் ஒலிக்கக் கேட்டுத்
திளைத்திருக்கும் ஒரு பிறவி கவிஞன் ஆவான்!

நேர்மைக்கு உயிர்விடவும் அஞ்சான் நல்ல
நெஞ்சுரத்தைக் கொண்டவனே கவிஞன்! கண்கள்
பார்வைக்குப் பட்டதெல்லாம் ப(இ)ச்சை யாகப்
பாடுகின்ற பாட்டாளி கவிஞன்! சும்மா
போர்வைக்குள் மறைந்திருந்து பலரும் போற்றப்
போலியென வாழாதான் கவிஞன்! "ஏழை -
வேர்வைக்கு விலைகாண விழையும்" கொள்கை
வேதத்தை விளக்குபவன் கவிஞன் ஆவான்!

அ.கௌரிதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிஞன் தீண்டும் காரிகை!

முழுநில வொத்த நல்ல
முகத்தினள்! ஆசை யோடு
தழுவிட ஏற்ற கன்னித்
தனத்தினள்! காதல் தூவி
இழுத்திடும் பருவம் கொண்ட
இனியவள்! மதர்த்து நிற்கும்
கொழுத்த செந் தொடைகள் பெற்ற
குமரியாள், அழகுச் சிட்டு!

மாதுளை முத்தைப் போலும்
மணிஎயி றதனைப் பெற்ற
மாதவள்! மணக்கும் ரோஜா
மலரவள்! மதுவின் ஊற்று!
தீதிலாச் சுகங்கள் நல்கும்
திருமகள்! இரவு வேளை
காதலாய் கவிஞன் தீண்டும்
காரிகை, கன்னி மொட்டு!

சிரிப்பினால் இதயம் ஈர்க்கும்
சித்திரம்! மெத்தை யென்னும்
விரிப்பிலே கரங்கள் பின்னும்
விசித்திரம்! வாழ்க்கைக் காவில்,
பரிவுடன் எனை மதிக்கும்
பைங்கிளி! பட்டுத் தென்றல்!
உரிமையாய் கல்விப் போர்செய் -
உத்தமி; இனிக்கும் லட்டு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படைத்தவன் அருள வேண்டும்

*நித்தமும் நான் கண்விழித்து*
*நித்திரைதான் இல்லாமல்*
*எத்தனையோ பாட்டெழுதிச் சேர்த்தேன் - அதை*
*எப்போது புத்தகமாய் கோர்ப்பேன்?*

*சொத்து நகை - காணிநிலம்*
*சுந்தரியின் வீடு வயல்*
*இத்தனையும் சீதனமா பெற்றேன்?- பணம்*
*இல்லாத மனைவியையே ஏற்றேன்!*

*பத்திரண்டு வருடங்கள்*
*பதவிதனில் இருக்கையிலே*
*சத்தமில்லைச் சத்தியமாய் வீட்டில் - இன்று*
*சனம்கூடிச் சிரிக்கிறதே "ரோட்"டில்!*

அ.கௌரிதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றெடுத்த பிள்ளைகளும்
பெரியவராய் ஆகிவிட்டார்
கற்கின்றார் உயர்வான கல்வி - மனைவி
கற்பிக்கச் செல்லுகிறார் பள்ளி!

சுற்றங்கள் - உறவினர்கள்
சொந்தமென இருப்பவர்கள்
பற்றோடு உரையாட மறந்தார் - கையில்
பணமில்லை உறவாட மறந்தார்!

மைத்துனியும் மணம்செய்து
மறைந்ததுவே ஓராண்டும்
சித்தப்பா பணம்கேட்டு யுத்தம் - என்று
செப்புகிறார் மழலைகளும் நித்தம்!

இத்தகைய சோதனைகள்
இதயத்தில் வேதனைகள்
புத்தகமும் அச்சில்வர வேண்டும் - எனைப்
படைத்தவனே வரமருள வேண்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புனிதனாவாய்!

அறுபது துளிகள் அவன்செல விட்டான்
அதிலொரு துளியில் நீயானாய்!
உறுதுணை செய்தே உடலுற வேற்ற
உத்தமி அவளும் தாயானாள்!

பத்துத் திங்கள் கருவறை யென்னும்
பள்ளியில் நீயும் துயில்கொண்டாய்!
பத்துத் திங்கள் வாழ்ந்து முடித்து
பாரெனும் இந்தப் புவிகண்டாய்!

நூலினைச் சுமந்தே புன்னகை தவழ
நுவலும் கல்வி பெறச்சென்றாய்!
வாலிப மிடுக்கில் வனிதையர் பலரை
வலையில் வீழ்த்தி நீவென்றாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்மை தீமைகள் தேரா நின்றே
நலிவும் சிறப்பும் தான்கொண்டாய்!
சின்ன மனத்தர் செகத்தில் காட்டும்
சீற்றம் தனையும் நீகண்டாய்!

பெண்ணாம் ஆசைக் கடலில் நீந்தி
பிள்ளைகள் பலரை நீபெற்றாய்!
கண்ணாய் இல்லாள் தன்னை மதித்து
களித்தாய் வாழ்வில் சிறப்புற்றாய்!

ஆத்மீ கத்தை அறியும் முயல்வில்
ஆலயம் தனிலே பழிநின்றாய்!
சாத்வீ கத்தின் சால்பை உணர்ந்தால்
சகத்தில் புனிதன் என்றாவாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிமலன் வழங்கிய தண்டனை

படுக்கையில் நோயினில் படுக்கும் நிலைதான்
பரமன் அளித்த தண்டனை! - முன்பு
மிடுக்குடன் வாழ்ந்து முடித்த வகையில்
மிகையாய்க் கிடைத்த தண்டனை!

பருவ மங்கையை பணத்தின் பலத்தால்
படுக்கைக் கழைத்த தண்டனை! - ஊரில்
பெருமகனென்றே போர்வையில் மறைந்து
பெருஞ்சதி செய்ததன் தண்டனை!

கழனிக் கூலிகள் கணக்கு வழக்கில்
களவு செய்ததன் தண்டனை! - நேரும்
இழவு வீடுகள் எட்டியும் பாராது
இருந்து சிரித்ததன் தண்டனை!

வட்டியால் மாற்றான் வளங்களை உறிஞ்சி
வாழ்ந்த நிலைக்குத் தண்டனை! - ஊரைப்
பெட்டிப் பாம்பாய் அடக்கி வைத்துப்
பெருமகிழ் வுற்றதன் தண்டனை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சுற்றம் பசியினில் சோர்ந்து துடிக்க*
*சோறிட மறந்ததன் தண்டனை! - கையைப்*
*பற்றிய மனைவி பக்கத்தில் இருக்க*
*பரத்தையை நாடிய தண்டனை!*

*சம்பளக் கணக்கில் சற்றுக் குறைத்து(ம்)*
*சட்டம் உரைத்த தண்டனை! - பணம்*
*"கிம்பளம்" பெற்றுத் துன்பிலா வாழ்வால்*
*கீர்த்திகள் பெற்றதன் தண்டனை!*

*ஆலய அறப்பணித் தலைமையில், காசினை*
*அறுவடை செய்ததன் தண்டனை! - பள்ளி*
*பாலங்கள் கட்டும் பணிகளை ஏற்றதில்*
*பாதியைச் சுருட்டிய தண்டனை!*

*காசதை இறைத்துப் போர்வை, மாலைகள்*
*கௌரவம் பெற்றதன் தண்டனை! - மனித*
*நேசம் விடுத்து நீசனாய் வாழ்ந்ததால்*
*"நிமலன் வழங்கிய தண்டனை!"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மா!

மண்ணக வாழ்வி லென்னை
மகனென ஈன்றெ டுத்து
அன்பெனும் கரையே யில்லா
ஆழியில் நீரு மாட்டி,
துன்பமே அணுகா வண்ணம்
தூய்மையாய் அரவ ணைத்த
அன்னையே மண்ணை நீத்து
அரனடி சேர்ந்திட் டாயா?

பஞ்சணை போட்டு வைத்தாய்
பகலிரா கண்வி ழித்தாய்!
விஞ்சிடும் பாசம் மேவ
வினைபல புரிந்தாய் நாளும்!
தங்கமே! முத்தே! எந்தன்
தளிரெனக் கையி லேந்திக்
கொஞ்சிய வுன்னை இந்தக்
குவலயத் தெங்கு காண்பேன்?

அ.கௌரிதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்திடப் பள்ளி சேர்த்தாய்!
பரிவுடன் பேணிக் காத்தாய்!
கடித்திடில் எறும்பு கூட,
கலங்குவாய், துடித்துப் போவாய்!
அடியவன் கண்ணீர் விட்டு
அழுதிடும் நிலையைத் தந்தே,
நெடிதுயில் கொண்டாய்! எந்தன்
நெஞ்சமோ தாங்கு தில்லை!

ஏழ்மையோ சேரா வண்ணம்
ஏற்றமாய் அடியேன் வாழ்வில்
தாழ்வின்றி உயர்ச்சி யோடு
தரணியில் தலைநி மிர்ந்து
வாழ்ந்திட வைத்த வுன்னை
வாழ்வினில் எங்குக் காண்பேன்?
பாழ்மனம் கிடந்து இங்கு
படுந்துயர் அறிவாய் "அம்மா"!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு கவிதை எழுதிவிட...

பத்தரைக்கும் முன்ன ரெந்தன்
பத்தினியாள் தூங்கி விட
நித்திரைதான் வாராமல்
நிகழ்வுகளை அசை போட்டு
சித்திரையின் வருகையினைச்
சித்தத்தில் நிலை நிறுத்தி
முத்திரையாய் ஒரு கவிதை
முனைகின்றேன் எழுதி விட...

பிரசவித்த தாய் ஒருத்தி
பின்வளவில் முனகு கிறாள்!
இரவுக் கனவில், வாய்
இளையமகள் புலம்பு கிறாள்!
உரலுக்குள் வெற்றிலை தோய்ந்
துவர்க்கின்ற பாக் கிட்டு
அரவத்தைத் தான் குறைத்து
அம்மானும் இடிக் கின்றார்!

அளவாகப் போடு கின்ற
அன்பழகன் இன் றேனோ

அ.கௌரிதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிவாகப் போட்டு விட்டு
பொறுமை, சுய நினைவை
இழந்துவிட்ட நிலை யினிலே
இசைசேரா வார்த்தை களை
வழங்குகிறான்! செவிப் பறையில்
வந்ததுவும் எதிரொ லிக்கும்!

அடுக்களையில் பெருஞ் சத்தம்
ஆமாம் எலிக் கூட்டம்!
வெடுக்கெனவே வெங் காயம்
வேறுபல பொருட்களையும்
எடுத்தோடும் அரவத் தால்
எலிபிடிக்கும் பூனைகளும்
முடுக்கிவிட்ட இயந்திரமாய்
முயற்சியினைத் தொடர்கிறது!

சிற்றாற்றங் கரை தனிலே
சிறுவெளிச்சம் தெரிகிறது
சற்றேனும் உடல் தளராச்
சங்கர் கரம், அத்தாங்கு -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றியதோர் கோல முடன்
பவித்தாவை அழைக்கின்றான்!
முற்றத்து மா மரத்தில்
மூளும்போர், வெள வால்கள்!

தென்னைமரம் தனிலி ருந்தோர்
தேங்காயும் விழுந்து விட
தன்னைத்தான் மறந்து விடாத்
தன்மையுடன் எங்கள் நாய் -
சன்னதங்கள் கொண்டே தான்
சத்தமிட்டு எழுந் தோடும்!
பின்னிரவை எட்டித் தான்
பிடிக்கிறது கடி காரம்!

சத்தங்கள் காதில் வந்து
சச்சரவு தந்த தனால்
புத்தாண்டுக் கவிதை யினைப்
புஷ்பிக்க முடி யாமல் -
சித்திரைப் பெண் நினைவில்
சித்தமது தோய்ந்த படி
நித்திரையாய் ஆகி விட்டேன்
நிலம் விழிக்கும் கதிர் வந்தான்!

அ.கௌரிதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரை ஆளும் பதவி வேண்டாம்!

தேசத்தை ஆளும் பதவியை எனக்குத்
தேவா, நீயும் தரவேண்டாம்! - படு
மோசத்தைச் செய்யும் மனநிலை வந்து
மந்தையென் றாகவிட வேண்டாம்!
வேசத்தைச் சூடி வெற்றிகள் குவித்து
வேந்தனென் றிருக்கும் நிலை வேண்டாம்!-தினம்
நாசங்கள் புரியும் மனதினைத் தந்து
நாயிலும் கீழாய் விட வேண்டாம்!

இங்கிதம் தெரிந்த மனிதனென் றாகி
இருக்கும் வாழ்வு அது போதும்! - வரும்
சந்ததி யென்னை உயர்ந்தவன், நேர்மை
சார்ந்தவ னென்றால் அதுயோகம்!
மங்கையர் பழிகள் சூடா(து) இருக்கும்
மாண்பினை வழங்கு மென்மேலும்! - இந்த
மன்பதை மீதினில் சாதிக் கொடுமைகள்
மாய்க்கும் நிலைதான் என்தாகம்!

போட்டி, பூசல், பொறாமை பற்றாப்
புனிதனென் றென்னை உருமாற்று! - காணும்
ஏற்றத் தாழ்வுகள் இழிவுகள் தொலைக்க
இரும்பு மனத்தைப் புடம்போடு!
'பாட்டால் இந்தப் பாரினை ஆண்ட
பாரதி' போலெனை இருக்கவிடு! - ஒரு
மாட்சிமை பெற்று மண்ணிடை உலவும்
"மகுடம் தந்தெனைச் சிறக்கவிடு"!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாட்சிக்கு எவருமில்லை

ஏழ்மையது வாழ்வி னுக்கு
இடையூறு செய்ததனால்
வாழும்இள வயது டைய
வஞ்சியவள் தொழில்தேடி
பாழ்பட்ட ஒரு வீட்டில்
பணிசெய்த பெறுபேறாய்
வாழ்க்கை தனைத் தொலைத்து
வசைசூடி நிற்கின்றாள்!

வாலிபத்து பெண் மலராள்
வழுக்கிவிழும் பருவ மது,
ஆசையிலே பங்கெ டுத்து
அகன்றதுவோர் ஆண் வண்டு
பாலியலைப் பலர்மதிக்கும்
படியாகச் செப்ப னிட்டு
வாழ்விக்க வாரா மல்
வாலிபனும் மாறி விட்டான்!

தொப்பையாய் அவள் உதரம்
தோற்றமது தெரிகையிலே
தப்பேதோ நடந்த தென்று
தந்தைதாய் முணுமுணுத்தார்

அ.கௌரிதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது பிள்ளை யொன்றை
ஈன்றாளே 'குமர்ப் பிள்ளை'
அப்பாவை அறிந்தி ருந்தும்
ஆர், சேய்க்குப் பெயரிடுவார்?

ஊரினிலே செல் வாக்கு
உள்ளதொரு குடும் பத்தின்
வாரிசென்று வந்த வனின்
வாலிபத்து விளையாட்டு,
காரிகையின் வாழ்வி னுக்கு
களங்கத்தைச் சேர்த்த கதை
ஊரினிலே தெரிந்தி ருந்தும்
உதவிதர எவரு மில்லை!

சட்டத்தின் முன்னிறுத்தி
சத்தியத்தை நிலைநாட்ட
மட்டும் முடிய வில்லை!
மதிப்பிழந்து நடைப்பிணமாய்
கட்டுக் குலையாத மகள்
கண்கலங்கி வாழ்நிலையைச்
சட்டமும் அறிய வில்லை
சாட்சிக்கும் எவரு மில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனவு

காட்டினாள் உடலை உள்ளம்
காட்டிட மறந்தாள்! நெஞ்சை
வாட்டினாள்! சிறிது நேரம்
வந்திடு மாறு கையை
ஆட்டினாள்! அருகில் சென்றேன்
அறையினில் என்னை வைத்தே
பூட்டினாள் பார்ப்போ மென்று
பொறுமையை மேற்கொண்டேனே!

ஆடினாள் - நெளித்தாள் எல்லாம்
ஆட்டினாள்! அசைத்தாள் ஏதோ
பாடினாள் - சிரித்தாள்! என்னைப்
பார்வையால் இழுத்தாள்! எங்கோ
ஓடினாள் - மீண்டாள் கையில்
ஒருசிறு குடிநீ ரோடு,
தேடினாள் எதையோ என்னில்
சிறிததைப் பருகத் தந்தாள்!

அ.கௌரிதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருகினேன் மறந்தேன் என்னை
பாகென உள்ள மெல்லாம் -
உருகினேன்! அயர்ந்தேன் எந்தன்
உடலெலாம் தழுவிக் கொண்டே,
அருகினில் இருந்தா ளாக்கும்!
ஐயகோ, அடடா எங்கும்
இருள், பெருங்கனவு, ஆசை
இன்பமென் றெல்லாந் தானே!

விடிந்தது நான்தான் கண்ணை
விழித்தனன் பணத்தாளெங்கே?
முடிந்தது ஏதோ இல்லாள்
மொழிந்தெனை அனுப்பி ளாளே!
கடிந்திடு வாளே நான்ஏன்
கயவனாய் ஆனேன்! செத்து
மடிந்திட வாநான், வேண்டாம்
மறந்திடாக் "கனவு" தானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறுபிறப்பில் என்னை மகனாகப் பெற்றுவிடு!

தும்பியது பிடிக் கின்ற
துடுக்கான சிறு வயதில்
அம்மாவுன் முந்தானை
அளைந்து திரிந்தவன் நான்!

ஆனாவை அரி வரியில்
ஆம், நானும் அறிய முதல்
பேனாவால் “ஆனா” வைப்
பெற்றவள்நீ, எழுதவைத்தாய்!

பத்தாம் வயதி னிலும்
பால்குடித்த நினைவுகளை
சித்தம் மறக்கவில்லை
சித்திரமே, நீ இலையே!

அண்ணன்மார் அக்காமார்
அனைவருக்கும் ‘கடைக்குட்டி’
இன்னுமென்னைத் துரத்தி வரும்
இனியவளே, உன் பா(வா)சம்!

காசினியே மதிக் கின்ற
‘கவிஞன்’ எனும் படியாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசரிய தமிழ் ஊட்டி
பெருங்கல்வி கற்பித்தாய்!

மணம்முடித்து எந்தனுக்கு
மழலைகளோ நான்கி ருந்தும்
கணப்பொழுதும் உனைக் கண்டு
கதைபேசா நாளிலையே!

வறுமையிலே வாடி டினும்
வாய்மைதனை மறக்காமல்
வறுமையிலும் செம்மையுடன்
வாழ்ந்து முடித்தவளே!

'அம்மாநீ, இல்லை' யென்ற
அந்தவொரு வெற்றிடத்தை -
இம்மா நிலத் தினிலே,
'ஈடுசெய்ய எவரு மில்லை!'

கண்மணியே! எந்த னையே
கண்போல காத்தவளே!
மண்மறைந்தாய் "எனை மகனாய் -
மறுபிறப்பில் பெற்று எடு!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரலாறாவாய்!

ஆசைக்கு அணைபோட்டு வாழக் கற்றால்
ஆம் என்றும் துயரங்கள் அண்ட மாட்டா!
பாசை, மொழி மதமென்று பகுத்துப் பார்க்கும்
பான்மையினால் பாரினிலே அமைதி சாகும்!
காசைத்தான் வாழ்வென்று கருதா விட்டால்
காலமெலாம் எம்மோடு மகிழ்வு கூடும்!

மூவாசை தனைத்துறந்த முனிவ னென்றே
முகமூடி போடாமல் வாழப்பாரும்!
மூவாசை இல்லாத மனிதன் இல்லை
மூன்றினிலே ஒன்றேனும் இருத்தல் கூடும்!
தாமாசை துறந்தவராய் நடிக்கும் பொல்லாத்
தாழ்வுநிலை தனைவிட்டால் தழைக்கும் வாழ்வு!

போட்டியிடு பொறாமையினைத் தூரம் வைத்து
பொதுவுடமை வழிநின்றால் தொடரும் மேன்மை!
கூட்டுறவே நாட்டுயர்வு என்னும் கொள்கை
குலையாத தன்மையினால் வாழ்வில் செம்மை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்சிமைகள் தனைக்காணும் புனிதம் தேடி
மரணித்துப் போனாலும் உலகம் உள்ளும்!

களவுடனே பொய்மையினைக் கடந்து செல்லும்
கண்ணியத்தை வாழ்வாக்கி வாழப் பாராய்!
இழவுமது தனைவிட்டால் இன்பம் சேரும்
இல் வாழ்வு இனிப்பாகும், சொர்க்க மாகும்!
அழகுநிலை யில்லையெனத் தேர்ந்து கொள்ளு,
அன்பொன்றே நிலையென்று அறிந்து வாழு!

சுற்றத்தை மதிக்கின்ற உள்ளம் பெற்று
சுயநலங்கள் பற்றாமல் வாழ்வை யோட்டு!
கற்றவர்கள் மனம் நோக நடக்கும் செய்கை
களைகின்ற விதமாகப் புதுமை காட்டு!
மற்றவரும் உன்போன்ற மனிதர் என்ற
மனநிலையில் வாழ்ந்தால் நீ 'வரலாறாவாய்!'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிபதி நீதான்!

*சமயம் என்ற சாயம்பூசி*
*சாவை வழங்காதே! - உனை*
*அபயம் என்றே வந்தமாதை*
*அடித்து விரட்டாதே!*

*அனைத்து மதமும் ஒன்றேயுலகு*
*ஆண்டவன் ஒருவன் தான்! - நீ*
*நினைப்பது போலும் சாதிகளில்லை*
*ஆண், பெண் இருவர் தான்!*

*அழகைக் கண்டு விலைபோகாதே*
*அந்தம் அழுவாய் நீ! - தூய*
*உளத்தைத் தேடி வாழ்விலிணைந்தால்*
*உயர்வாய் மகிழ்வாய் நீ!*

*கார்கல் வீடு காசு பணத்தை*
*'கண்டு மயங்காதே! - அடிமை*
*வாழ்வை விலக்கி ஆண்மக னென்று*
*வாழத் தயங்காதே!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்ல இறையில் கொள்வாய் பக்தி
வாழ்வு வளமாகும் - துயர்
தொல்லை நீங்கி நன்மை தேங்கும்
சொர்க்கம் வாழ்வாகும்!

உந்தன் குடும்ப அங்கத் தவரில்
பெண்கள் எத்தனை பேர்? - நீ
சிந்தை நிறுத்தி சிந்தித்தாலே
உனக்குள் மூளும் போர்!

உழவுக்கேற்ற மாடாய் இருந்தால்
ஊரில் விலைபோகும்! - பழ
மொழியை மறந்து வாழ்ந்தா லுந்தன்
மானம் பறிபோகும்!

இன்பம் துன்பம் இரவும் பகலும்
இறைவன் வகுத்த விதி! - இதை
உன்றன் வாழ்வில் ஏற்று நடந்தால்
நீ தான் நீதிபதி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகம் வாழ்த்தும்!

கண்ணியனாய் நீ வாழு கபடிபோலும்
காலத்தை ஓட்டாதே! அயலார் தம்மை
உண்மையுடன் நேசிக்கக் கற்றுக் கொள்ளு
உதவாத கொள்கைகளை உதறித்தள்ளு!
திண்ணிய நல் இலட்சியத்தை ஏற்று நில்லு
தீமைகளைக் களைந்தோட்டும் செயலால் வெல்லு!
பண்பான சமூகத்தைப் படைக்கும் வண்ணம்
பணிசெய்தால் பாருன்னை நினைத்தல் திண்ணம்!

சாதியெனும் கொடுந்தீயை அணைக்கப்பாரு
சமத்துவத்துத் தத்துவங்கள் எடுத்துக் கூறு!
நீதியதன் பாதையிலே பயணம் செல்லு
நீசர்களை அவர்கொட்டம் தனை நீ கொல்லு!
சோதியினை உலகுக்குப் படைத்துக்காட்ட
சுற்றமென மாந்தரெல்லாம் மாலைசூட்ட
சாதனைகள் தோற்றிடுவாய்! உந்தன் பாதை
சரித்திரமாய் ஆகிவிடும் வெல்வாய்பூவை!

ஏமாற்று உலகத்தை மாற்றப்பாடு
ஏற்றமுறு வாழ்வுக்கு வழிகள் தேடு!
நாகாத்துநீ வாழ்ந்தால் நன்மைகூடும்
நாட்டினிலுன் புகழ்வாழும் புன்மை ஓடும்!
போகாதே தீமைக்கு எதிராய் நில்லு
போதனையை நேராக்கி செயலால்வெல்லு!
வாகான திட்டங்கள் வகுத்தால் உன்னை
வரலாறு ஏற்குமடா உலகம் வாழ்த்தும்!

அ.கௌரிதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாரிடம் முறையிடலாம்?

"பச்சமுத்தார்" வளவி லொரு
பனைமரத்தில் 'குளவி'கள் தாம்
இச்சையுடன் கட்டியுள்ள
இணையில்லாப் 'பெருங் கூடு!'

சாலையிலே செல்ப வரும்
சஞ்சலங்கள் கொள்வதில்லை
வேலை செய்து மீள்ப வரும்
வில்லங்கம் கண்ட தில்லை!

நகர்சுத்தம் செய்ப வரும்
நடுங்கி ஒடுங்க வில்லை
பகர்ந்தால் குளவிகளால்
பயமில்லை எனும் கருத்தே!

இப்படியே நம்பி நம்பி
இருக்கின்ற காலையிலே
ஒப்பாரி வைத்தழவே
ஒரு நிகழ்ச்சி நடந்தும் மெய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பள்ளிவிட்ட நேர மதில்
பாலர்கள்தாம் வருகை" யிலே,
சொல்லிவைத்து செய்தது போல்
"கல்லெறிந்தான் ஒரு சிறுவன்!"

குளவிகளோ சினமடைந்து
கூடுவிட்டு வெளியேறி,
'மளமளெ' ன்று பிள்ளைகளை
மனம் போலக் கொட்டியது!

"வைஸ்ணவி' யாம் 'மீனு' மகள்
வாய்விட்டுக் கதறி யழ -
இஸ்டம்போல் "குளவிகள் தாம்
இரைந்திரைந்து கொட்டியது!"

அந்தோ 'பரி தாப நிலை'
ஆரிடம் போய் முறையிடலாம்?
விந்தைமிகு உலகாள்வோன்
விளையாட்டாய் எண்ணுவதா?

'தீபஒளித் தினத் தன்று
தெருவினிலே பட்டாசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெடித்திட்ட சத்தத் தால்
வீதியெலாம் குளவி மயம்!'

தீயிட்டுக் கூட்டினையே
தீய்த்திடலாம் ஆனாலும்,
தீயிட்டால் பனைமரத்தில்
தீபற்றி எழுந் தெரியும்!

"மின்சாரக் கம்பி களோ
மேலிருக்கும் காரணத்தால் -
முன்வருவார் எவருமில்லை"
முயற்சியெலாம் கைவிட்டார்!

பகரவழி இலையென்ற
படியாக ஊர் கூடி
"நகர பிதா பார்வைக்காய்
நல்லமடல்" சேர்க்கின்றோம்!

தகுந்தபடி ஆய்வு செய்து
தவிசாளர், தகமை பெற்ற
"நகரபிதா நல்ல தொரு
நடவடிக்கை எடுக்கட்டும்!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்ன வழி?

வட்டிப் பணத்தினால் ஊதிப் பெருத்தவர்
வானம்தொடு பெரு மாடிகட்டி
முட்டும் மகிழ்வுடன் மேதினி மீதினில்
முறுவலோ(டு) அன்னவர் வாழுகிறார்!
ஒட்டி யுலர்ந்துடல் ஓடாகிப் போனவர்
ஓடியுழைத்துமே பெற்ற 'கடன் -
வட்டி' செலுத்திடும் வழிவகை யின்றியே
வாழ்வினில் நாளெலாம் வாடுகிறார்!

பாணுக்கும் கஞ்சிக்கும் இடுகின்ற ஓலங்கள்
பணத்தரின் காதினில் வீழ்வதில்லை!
வீணுக்கே வாழ்பவர் விடிவினைக் காண்கிலார்
வேதனை மற்றவர் காண்ப தில்லை!
நாளுக்கு நாள்மாறும் நாகரி கத்தினால் -
நன்மையும் தீமையும் அத்துப்படி!
கூழுக்கும் வக்கற்று குடிசையில் வாழுவோர்
குதூகலம் கண்டிட என்ன வழி?

'அறுபது ஏக்கரில் வயல் நிலம் உள்ளவன்
அடங்கும் நிலமது ஆறுஅடி!
வறுமையில் வாடியே வாழ்வைத்' தொலைத்தவர்
வாழ்க்கை முடிந்தபின் ஆறுஅடி!
'இந்த நியதியை இங்கெவர் மாற்றினார்?'
இந்நிலம் வாழ்கையில் நல்ல படி -
சந்ததி யோர்களுன் சால்பை உரைத்திட
சத்தியம் போற்றி நீ, வாழ்ந்து முடி!'

அ.கௌரிதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரும்பு தின்னக் கைக்கூலி

காதுகளில் கம்மல் இல்லை
கழுத்தினிலே 'கிலிற்று' மில்லை
மாதவளைச் சொல்வ தெனில்
மாநிறத் துப்பே ரழகி!
ஆதலினால் ஆட வர்கள்
ஆசையுடன் அரவ ணைக்கும் -
போதையது தலைக் கேறப்
போட்டியிடல் புதின மில்லை!

பார்வையினால் அவள் எழிலைப்
பருகுகின் றோர்பல நூறு
'சீர்வரிசை கேட் காமல்
சிறைமீட்க ஒருவ ரில்லை!
சீர்வழங்கி மங்கை தனை
சிறப்பித்து வாழ்வ ளிக்கும் -
பேர்வழிகள் அவளுக் காய்
பிறக்கவில்லை என்பது மெய்!

தந்தையினைப் பறிகொ டுத்துத்
தாயவளின் அரவ ணைப்பில் -
விந்தைமிகும் உலகி யலோ
விதியென்று வாடு(மு) மிவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தை உணர்வு களைச்
சிந்திப்போர் இருந்தி ருந்தால்
மங்கையவள் மற்றவர் போல்
மங்கலநாண் ஏற்றி ருப்பாள்!

ஏழ்மையது வாழ்வி னுக்கு
இடையூறு செய்த பயன்
பாழ்பட்ட சமூக மதன்
'பணஆசை' தடைக் கல்லாய் -
வாழ்வின் வசந்த மதை
வருடிவிட முடியாமல்
வாழ்கின்றாள் அழகு மகள்
வதனத்தில் சோக நிழல்!

கரும்பு தின்னக் கைக்கூலி
காளையர்கள் எதிர்பார்க்கும்
பொருந்தா(த) நடைமு றைகள்
பொய்யாகிப் போய் விட்டால்
பருவத்துப் பூங்கொ டிகள்
பஞ்சணையில் பூப் பூக்கும்!
திருமணத்தின் திருநாளில்
திளைத்திருப்பார் களித்திருப்பார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரவு செலவு மறந்த வாழ்வு

குடியும் சூதும் கூத்தியும் மலிந்து
குவலயம் இடுகாடு - பிண
நெடியே வீசும் நிலமிசை யிருந்து
வாழ்வது பெரும் பாடு!

குரங்கில் இருந்து பிறந்த மனிதன்
குரங்கிலும் படுமோசம் - அவன்
வரவின் பின்னர் உலகம் காணும்
வாழ்க்கை மிகநாசம்!

பன்றிகள் போலும் பாலர்கள் பெறுவான்
பண்பில் தரைமட்டம்! - தயை
நன்றி உணர்வில் நாயிலும் கீழாய்
வாழ்வதில் இவன்இஷ்டம்!

மதுவைப் பருகி மகிழ்வடை கின்றான்
மந்தை ஆகின்றான்! - இவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமை உலகைத் தோற்றிட நினைந்து
புன்மையில் ஆழ்கின்றான்!

சிற்றின் பத்தில் சிந்தையை இழந்து
சீரழி வுறுகின்றான் - பணப்
பற்றின் மேலாம் ஆசையினா லிவன்
பலதும் செய்கின்றான்!

சாதி யென்னும் சாக்கடை நீரினில்
சணமும் நனைகின்றான் - பொது
நீதி மறந்து நிலமிசை புலஞும்
நிகழ்த்த முனைகின்றான்!

மரணம் என்றொரு நிலையை மறந்து
மனம்போல் நடக்கின்றான் - தன்
வரவும் செலவும் மறந்துஈற்றில்
வாழ்வை முடிக்கின்றான்!

அ.கௌரிதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடலோடு சங்கமித்த கதையெங்கும் ஒலிக்கிறது!

*சேரிப் பரப் பெங்கும்*
*செம்படவர் சிறுகு டில்கள்*
*வாரியிலே மீன்பி டித்தே*
*வாழுமிவர் பரம்ப ரைகள்!*
*மாரிக் கடல் இரைச்சல்*
*மனதில் பயம் ஊட்ட*
*சேரியிலே தனித்தி ருந்தே*
*சிந்தித்தாள் சின்னாச்சி!*

*கோழியது கூவும் முன்னர்*
*குடும்பநிலை தனை நினைத்து*
*ஆழியிலே மீன்பி டிக்க*
*அரவிந்தன் போய் மாலை*
*கங்குலென மாறி இருள்*
*கவிகின்ற வேளை வர*
*இந்தளவும் வரா நிலையில்*
*என்செய்வாள் சின்னாச்சி?*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணக்குன்றாம் அவள் அத்தான்
கோதையினைக் கைப்பி டித்தே
மணவாழ்க்கை மூன்றாண்டு
மறைந்தாலும் மகிழ்விக்க
மழலை யொன்றும் இல்லாமல்
மனம்நொந்து வாடுகையில்
உளம் தேற்றி ஆறுதலை
ஊட்டிடுவான் அரவிந்தன்!

கடந்து விட்ட கால மதன்
களிப்பான நினைவு களும்
நடந்து முடிந்து விட்ட
நல்லபல நிகழ்வு களும்
படமாகி மனத் திரையில்
பதிவாகி இருக்கையிலே
மடமாது அதை யெண்ணி
மனதுக்குள் அழுகின்றாள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னாச்சி குடிசையின் முன்
சேர்ந்து நின்ற கூட்டமதைக்
கண்களினால் கண்ட வளும்
கதிகலங்கி குரல் சோர
என்னாச்சு? என்றெ ழுந்தாள்
எதிர்நின்றோர் மௌனத்தால்
கண்ணாளன் கடல் கொண்ட
கதையறிந்து புலம்பு கிறாள்!

தக்கதுணை யாய் இருந்தே
தனைக்காத்த அரவிந்தன்
விக்கியே அழ வைத்து
வேதனையை விதைத்து விட்டு
கடலோடு சங்க மித்த
கண்ணீரின் கதையே "செம்-
படவர்" குடில் எங்கும்
பரந்தே ஒலிக் கிறது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இல்லறத்தின் ஜோதி!

வாழ்வென்றால் ஆண்பெண்ணின் இணைப்பு
வற்றாத சுகம் நல்கும் பிணைப்பு
பாழ்பட்டுப் போனாலும்
பைங்கிளியே உந்தனுடன்
வாழ்ந்திடுதல் எந்தனது நினைப்பு!

நீயன்று சிரித்திட்ட சிரிப்பு
நித்திலமே முல்லைப்பூ விரிப்பு
தீயென்னும் காமத்தைத்
தினந்தினமும் அணைக்கின்ற
நீ மேகம், வளிசெல்லா அணைப்பு!

தாவுகின்ற எனது மனம் குரங்கு
தளிருனக்கு வாழைநிகர் குறங்கு
பாவடிக்கும் கவிஞனுன்னைப்
பற்றிடவே துடிக்கின்றேன்
ஆதலினால் எழிலேநீ இரங்கு!

அ.கௌரிதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குட்டையிலே வாழ்மீன்கள் கண்கள்
குத்தியதால் உள்ளத்தில் புண்கள்
எட்பூவின் நாசியினாள்
என்காதல் ராணியிவள்
மட்டுமொழி, சிந்துவதோ பண்கள்!

ஆண்மைக்கு என்றுமில்லை ஓய்வு
ஆதலினாற்றான் தேகம் காய்வு
காண்கின்ற அத்தனையும்
கலவியிலே கண்டுவிட
வேண்டுமென்ற தீராத ஆய்வு!

பின்னழகு ஈர்க்குமெனைக் கோதி
பேசுதற்கு ஏதுமில்லை மீதி
முன்னழகு பங்கயத்தின்
மொட்டாகும்! கைப்பிடித்த
என்னவளோ இல்லறத்தின் ஜோதி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகழ் தேடப்'பா' பாடு!

பிரமன் படைப்பில் பிசிகில் லாமல்
பிறந்தவள் ஒருத்தி நீயென்று
விரசம் சேர்த்து கவிதை தீட்டும்
வித்துவக் கவிகாள்! தலைமுறையாய்
கரங்கள் கட்டி வாழும் மாந்தர்
கவலும் நிலையை உயர்த்திவிட,
ஒருவரி யெழுத மறந்தீர் ஏனோ
"உண்மைக் கவிதை இதுவன்றோ?"

சின்ன இடையை பெரிய தனத்தை
சிகையைத் தொடையை மான்விழியை
கன்னல் மொழியை சங்குக் கழுத்தை
காலிடுக் கிருக்கும் சொர்க்கமென
சின்னத் தனமாய் கவிதை செய்யும்
சீரழி வெல்லாம் விட்டுவிட்டு,
அன்னக் காவடி யென்ன வாழ்ந்திடும்
"அகதிகள் வாழ்வினை எழுதீரோ?"

பசியால் மழலைகள் வாடித் துடித்திட
பால்சுரக் காத மார்பகத்தைச்
"சுவைக்கத் தந்து தலையை வருடும்
சுந்தரி வாழ்வின் துயர்க் கதையை
கவியாய்த் தீட்ட மறந்ததும் என்ன?"
கவிகாள் உங்கள் கவிவளத்தால்,
புவியில் நலங்கள் எட்டிட ஏதும்
புகன்றால் உலகம் புகழாதோ?

அ.கௌரிதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இல்லாள்

இல்லத்துக் கொளியூட்டி இல்வாழ்வை வளமாக்கும்
இதயத்தைப் பெற்றவளே இல்லாள்! - பொருள்
இல்லாத வேளையிலும் இன்முகத்தோ டன்பாக
இனியமொழி தருமவளே இல்லாள்!

கட்டியவன் சுற்றமதை கண்ணியமாய் மதிக்கின்ற
கடமையிலே தவறாதாள் இல்லாள்! - அவள்
கட்டிலறைத் தேவைகளை மட்டும்தான் கருதாதாள்
கணவனுக்குத் தக்கதுணை இல்லாள்!

அயலவரை வரவேற்று அகம்மகிழ நேசிக்கும்
அன்புக்கு இலக்கணமே இல்லாள்! - தினம்
பயபக்தி தான்கொண்டு பணிவிடைகள் செய்யுமவள்
பாரினிலே தலைக்கனமே இல்லாள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றெடுத்த மழலைகளைப் பேணிநிதம் வளர்ப்பதிலே
பெருமிதங்கள் கொள்பவளே இல்லாள்! - மிகக்
கற்றவளாய் இருந்தாலும் காசினியில் நாற்குணங்கள்
கைக்கொண்டு நடப்பவளே இல்லாள்!

இரப்பவர்க்கு ஈயுமுயர் இரக்ககுணம் மிக்கவளே
இலட்சணத்தின் உறைவிடமே இல்லாள்! - ஆளன்
சிறப்புகளைக் கண்டுநிதம் சிந்தையது குளிர்ந்திடவே
சிரிப்புதிர்க்கும் சித்திரமே இல்லாள்!

கணவனையே கண்ணாக கற்புநிலை தனைப்போற்றி
கடவுளுக்கு அஞ்சுபவள் இல்லாள்! - பாரில்
குணவதியாய் தானிருந்து குடும்பத்தை அரவணைக்கும்
குலமகளே, திருவுருவே இல்லாள்!

அ.கௌரிதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கழுத்தறுப்பு அவலம் கண்டேன்!

பேயாடி நூல்கட்ட கோழி வெட்ட
பெருமடைகள் தான்போட்டு கூச்சல் போட
தாயாடி மகள் ஆடி தலைவன் ஆடித்
தலைமுறைகள் ஆண்டாண்டாய் ஆட்டம் ஆடும்!
நோயாறும் பிணிதீரும் வளங்கள் சேரும்
நோக்கங்கள் நிறைவேறும் என்றே நம்பி
ஆயிரங்கள் செலவுசெய்து ஆடு வெட்டும்
ஆறறிவு மானிடரின் அவலம் கண்டேன்!

வளவுக்குள் மூலையிலோர் கோயில் வைத்து
வரும்செவ்வாய் வெள்ளியிலே விளக்கு யேற்றி
நலமார்ந்த மடைவைத்து சாமி ஆட்டி
நலன் - தீது அறிகின்ற குறிகள் பார்க்க
மந்திரங்கள், பறைமேளம், உடுக்க டிப்பு
மகத்துவமாம் சாட்டையடி, பலிகொடுப்பு
சந்ததமும் பூசாரி மார்கள் கூட்டம்
சாமிக்கு(ம்) சாராயப் படையல் ஆட்டம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேப்பைமரம், வீரைமரம், பனிச்சை மற்றும்
விண்தொடவே வளர்கின்ற ஆலின் கீழும்
காப்பளிக்க வைரவரைக் காவல் செய்வார்
காளியுடன் காளமா முனியை வைப்பார்!
பாதாள வைரவரை சுடலை மாடன்
பகர்சண்டி வராகி வீர பத்(தி)ரர்
ஆதாமும் ஏவாளும் அறியா நாமம்
ஆயிரமாய் வைத்துவழி பாடும் செய்வார்!

காடேறி நரசிங்கன், மூர்க்க மாதா
காளியுடன் கிங்கிலியன், பேச்சியம்மன்
ஊடாடும் தெய்வத்தைப் பேய்க ளாக்கி
உயிர்வாங்கும் பேய்களுக்குத் தூபம் காட்டி
மாடாடு போல்வாழும் எம்இி னத்தின்
மதிநுட்பம் தனையானும் ஏது சொல்வேன்?
கோடேறி வழக்காடி வெல்ல நிற்பார்
குடிபிறந்தார் தனைவெட்டிக் கொல்ல நிற்பார்!

அ.கௌரிதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தனையும் மாயம்!

பொங்கலுக்காய் அறுவடைக்குக் காத்திருந்த
பொன்வயலும் வெள்ளத்தால் அழிந்து சாக
வங்கியிலே வைத்தநகை பத்து (இ)லட்சம்
வட்டிகட்ட முடியாமல் 'ஏலம்' போக,
தங்கைக்காய் சாட்டிவிட்ட 'மாடு கன்று'
தவணைமுறைக் கொன்றாக இறந்துபோக
பங்கமிலா உறவுகளும் நீதிமன்றப்
படியேறிப் பணத்துக்காய் உயிரை வாங்க

கந்தோரில் பணிபுரிந்த நண்பர் கூட்டம்
கண்டபடி மேலிடத்தில் அள்ளி வைக்க
சந்ததியாய் செய்துவந்த கோயிற் பூசை
சடுதியிலே பிறிதொருவர் கைக்கு மாற,
விந்தைமிகு விதமாகப் பிள்ளைகுட்டி
வீட்டினிலே 'புரளி'களை உண்டு பண்ண
எந்தனது மனைவியுமே எதிர்மாறாக
என்மீதே குறைகூறித் திட்டித் தீர்க்க

'ஊர்த்தலைமைப் பதவியது விட்டுப் போக
ஊர்வாய்கள் ஒரு விதமாய் தொட்டுப் பேச
பேர்த்திகளும், பேரர்களும் பழசு என்றே
பேர்வைத்துக் கூத்தாடித் தாளம் போட,
வார்த்தைகளில் வழங்கிடவே இயலா வண்ணம்
வாழ்வினிலே துயர்பற்றி எனையே வாட்ட
நீர்த்திவலை கண்களிலே பனிக்கும் நேரம்
நினைக்கின்றேன், இவ்வுலகில் 'அனைத்தும் மாயம்!'

அ.கௌரிதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானிட நேயம் மதிக்கும் மனிதன்

பகுத்து அறியும் ஆறாம் அறிவைப்
பாழ்செயும் குடியை விடுமகனே! - நீ
வகுத்து வாழ்வை வளமாய் ஆக்கும்
வல்லமை வழியை தொடுமகனே!

அக்கம் பக்கம் இருப்போர் தம்மின்
அன்பாம் உரைகள் கேள்மகனே! - அவர்
துக்கம் துயரம் எதிலும் கலந்து
தூயவன் என்றே வாழ்மகனே!

பொறுமை காத்து வாழநீ கற்றால்
பொறாமை உனையே பற்றாது! - நீ
வறுமை தனிலும் வாய்மை காத்தால்
வறுமை நோயுனைத் தொற்றாது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லவன் என்றதோர் நாமத்தைச் சூடிட
நல்ல பாதையை நாடிடுவாய்! - பிறர்
தொல்லைகள் தீர்த்திட தொல்லுல கத்திலே
துணிந்து நீயும் ஓடிடுவாய்!

சாதிகள் என்னும் சாயங்கள் பூசும்
சாக்கடை வாழ்வைப் போக்கிவிடு! - சம
நீதியே நிலைக்க நின்பணி தொடர்ந்து
நீசத் தனங்களை நீக்கிவிடு!

மானிட நேயம் மதிக்கும் புனிதன்
மனிதன் என்று நீயாவாய்! - இந்
நானிலம் மீதில் நல்லவை செழிக்க
நலிவுகள் எரிக்கும் தீயாவாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவையனைத்தும் இருக்கிறதா?

'ஆலையூர்' எனும் ஊர்க்கே
அழகுதரும் ஆலை மரம்
ஆலைமர மருங் கினிலே
அமைந்தவொரு நீர்க்கேணி!
காலமெலாம் செந்தமிழைக்
கற்றுவந்த எம்பள்ளி!
காலத்தின் ஓட்டத் தால்
காவாமல் இருக் கிறதா?

விழுதெறிந்த ஆலை மரம்
விநாயகரின் பெருங்கோயில்!
பழம் சொரிக்கும் வெண்நாவல்
பன்னீர் வம் மிமரம்
குண்டெறியும் பனைக் கூடல்
"கொழுந்தக்கா" பெருவீடு
இன்னும் முன்ன ரைப் போல்
எழிலாக இருக் கிறதா?

நீர்க்காகம் நாரை கொக்கு
நிரைநிரையாய் ஆட்காட்டி
பார்க்கும் திசைய னைத்தும்
பசேலென்னும் கண்டல்மரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈர்க்கும் வயற்பரப்பு
இத்தனையும் முன்னரைப் போல்-
பார்க்கும் வகை யினிலே
பழையபடி இருக்கிறதா?

'தாமரைவில்' ஆற்றோரம்
தாழைமரக் கிளை களிலே
வானரங்கள் கூத்தாடும்!
வரிசையிலே பசுக்கூட்டம்
மேய்ச்சல் நிலங் களிலே
மேய்ந்துவர அழகொளிரும்
காட்சிகளும் முன்ன ரைப் போல்
கலையாமல் இருக் கிறதா?

கண்ணியத்தை மறக் காமல்
காலமெலாம் உற வாடும்
'கிண்ணியா' நண்பர் களின்
கலையாத நட்புணர்வும்
குன்றாமல் குறையாமல்
கொள்கைவழி பிசகாமல்
இன்றும் முன்னரைப்போல்
இறவாமல் இருக் கிறதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விதி சிரிக்கிறது!

"கண்ண தாசனார்" சொன்ன தத்துவம்
கடைசியில் சரியெனப் புரிகிறது - என்
கண்கள் இரண்டிலும் கவலை மேலிடக்
கண்ணீர் வந்து சொரிகிறது!

ஊரில் படித்தவன், உத்தியோ கத்தனாய்
உலவிய காலம் தெரிகிறது - 'பணம்
பாரில் பண்ணிடும் புரளிகள்" தன்னையே
பார்க்கையில் உள்ளம் அழுகிறது!

"நடிகராய் வாழ்ந்தவர்" நடுக்கடல் விட்டவர்
"நரி" களாய் இன்றெ தெரிகிறது - உடல்
வடிவினில் மயங்கி வாழ்ந்த பொழுதுகள்
வந்தே மனதில் விரிகிறது!

அ.கௌரிதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவகம் செய்தவர் சிரித்தே மகிழ்ந்தவர்
சிந்தையை, சிந்தை நினைக்கிறது - "அப்
பாவி"யென் வாழ்வினில் மண்ணினைத் தூவிய
பாவியால் இதயம் கனக்கிறது!

பொன்னகை மின்னிடப் புவியினில் உலவிய
பொழுதுகள் மனதில் வருகிறது - "உயிர்
நண்பர்களென்று வாழ்ந்தவர் பலபேர்
நடைமுறை" துயரம் தருகிறது!

"கட்டிய மனைவி, மழலைகள் அன்புதான்
கடைசி வரை"யும் நிலைக்கிறது - நான்
பட்டினி யாலே பசித்தழும் போதினில்
பார்த்தெனை "விதியும் சிரிக்கிறது!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டோர நாவல் மரம்!

வீதியதன் மருங் கினிலே
வீட்டோரம் கிளை பரப்பி
"நாவல்மரம் விழாக் கோல
நாயகன்" போல் நிற்கிறது!

"நாவற் பழக் காலமிது"
நண்பர்களோ வீடு வந்து
ஆவலது தீரு மட்டும்
அருங்கனிகள் சுவைத்திருப்பார்!

'வழிப்போக்கர்' அனை வருமே
வாகான நிழலி ருந்து
களிப்புடனே கனி புசித்து
காலாறிச் சென்றி டுவார்!

பள்ளி விட்டு வருகையிலே
பந்தயத்து வீரர்கள் போல்
பிள்ளைகளும் ஓடி வந்து
பழம்பொறுக்கி மகிழ் வடைவர்!

அ.கௌரிதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகலினிலே "காகம், புறா"
பாட்டிசைக்கும் "குயிற் கூட்டம்"
"அணில்"களுடன் "மைனாக்கள்"
அழகாகப் பழம் தின்னும்!

இரவினிலே "வெளவால்கள்"
இனசனத்தைக் கூட்டி வந்து
மரத்தினிலே பேய் ஆடி,
மறுநாளே மனைக் கேகும்!

மஞ்சுளா செல்வ மலர்
மணியக்கா அரஞ்சலுடன்
சிந்து, ரது. யாழினியும்
சின்னனுமே வந்தி ருப்பார்!

அயல்வீட்டுத் "தர்சினி" யாள்
அதிகாலை கண் விழிப்பாள்
புயல் வேகம் பழம் பொறுக்கிப்
போய்விற்று பணம் சேர்ப்பாள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"குலமணி" க்கோ முற்ற மதைக்
கூட்டுவதில் பெருஞ் சிரமம்
பல மணிகள் இரவு - பகல்
பாவமவள் பணிபு ரிவாள்!

"சித்தப்பா" மரத்தை வெட்டிச்
சிறியதொரு கடை கட்டும்
சித்தமுடன் இருப்ப தென்று
செய்தியொன்று கசிகிறது!

நடப்பாண்டில் பழம் சொரியும்
நாவல்மரம் நாம் காண-
அடுத்தாண்டில் இருக்காதாம்
அதை நினைக்கப் பெரும் கவலை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாராதோ ஒரு பொழுது!

நெஞ்சமெனும் நெடுந்திரையில்
நிழற்படமாய் வந்தெ னையே
கொஞ்சுகின்ற மோகனம் உன்
குளிர் வதனம் காணாமல்
நெஞ்சம் வருந்து கிறேன்!
நினைவுகளில் தோய் கின்றேன்
பஞ்சணையில் படுத்தாலும்
பசிதூக்கம் இல்லையடி!

பள்ளியிலே நீ பயிலும்
பருவத்தே சாலை தனில்
கள்ளியுந்தன் பார்வைக்காய்
கணப் பொழுதும் ஏங்கியவன்!
சொல்ல வொணாத் துயரோடு
சோகத்தின் விளிம் பினிலே
அல்லும் பகலும் நான்
அல்லலுறல் அறிவாயோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தேயுன் நிலையறிய
முடங்கல் பல சேர்த்திருந்தும்
எத்தனையோ மாதங்கள்
ஏகியதுன் பதில் இல்லை!
அத்தானைக் கண்டிடவும்
ஆசையுனக் கிலையாமோ?
சொத்தே நான் தனித்திங்கு
சுகம் காண்ப தெப்படியோ?

காலைக் கதிர் வரவில்
கடிமலர்கள் மலர்வு களில்
வாலையுந்தன் எழில் கொஞ்சும்
வடிவழகைக் காணுகிறேன்!
சோலைக்குயில் தோற்கும்
சுந்தரியுன் குரல் தனையே
வாழ் வினிலே தினம் கேட்க
வாராதோ ஒரு பொழுது?

அ.கௌரிதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகிழ்விலாட மணம்செய்தேன்

சொத்து சுகங்கள் நாடாமல்
சுந்தரி யிடத்தே கைநீட்டி
பத்துச் சதமும் வாங்காமல்
பாரில் அவளை மணம்செய்தேன்!

காணி தோட்டம் கல்வீடு
கழுத்தில் கையில் நகைசூடி
வாநீ யென்று கேளாமல்
வஞ்சியை நானும் வரித்திட்டேன்!

அழகில் ரதியாய் உள்ளவளை
அடையும் ஆவல் தனைவிட்டு
உலகோர் போற்றும் பண்புடைய
உத்தமி தனையே மணம்செய்தேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச பதவி தொட்டவளில்
ஆசை விடுத்து தொழிலின்றி
இருக்கும் ஒருத்தி தனைத்தேர்ந்தே
இல்லற வாழ்வை நான்தொட்டேன்!

அடக்கம் பணிவு கொண்டவளை
அன்பாய் உயிராய் உள்ளவளை
தொடரும் வாழ்வின் துணையெனவே
தோதாய் எண்ணி மணம்செய்தேன்!

சீத னத்தை நா(தா)ன் வாங்கும்
சிறுமை யெண்ணம் பற்றாமல்
மாத னந்தான் அவளென்று
மகிழ்வி லாட மணம் செய்தேன்!

அ.கௌரிதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூய செயல்கள் வெல்லும்!

மார்க்கப் பற்று மிகப் பெற்ற
மனிதனாக வாழப் பார்!
யார்க்கும் தீமை தான் செய்ய
யாண்டும் மனதில் எண்ணாதே!
போர்க்கு ணங்கள் தனை விட்டே
போஷிப்பாய் நீ நே(தே)சத்தை
தீர்க்க மாகச் சொல்லுகிறேன்
தீய செயல்கள் வெல்லாதே!

கண்ட பெண்கள் அனைவ ரையும்
கலந்து மகிழ எண்ணாதே!
பெண்கள் எல்லாம் உன் காமப்
போகப் பொருளாய்க் கொள்ளாதே!
மண்ணில் உன்னை ஈன்ற உயர்
மாதா அவளும் பெண்தானே!
திண்ண மாகச் சொல்லு கிறேன்
தீய செயல்கள் வெல்லாதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*காட்டிக் கொடுக்கும் எண்ண மதைக்*
*கருத்திற் கொண்டு வாழாதே!*
*ஈட்டி போலும் மற்றவர் தம்*
*இதயம் தன்னில் பாயாதே!*
*போட்டி, பூசல், கெடுபி டிகள்*
*பொல்லாக் கொள்கை கொல்லுமுனை!*
*தீட்டி வைத்தார் அறிஞர் பலர்*
*தீய செயல்கள் வெல்லாதே!*

*இனிய வார்த்தைகள் இருக்கை யிலே,*
*இழிவு வார்த்தை பகராதே!*
*கனியை விடுத்து நீ பச்சைக்*
*காயைப் புசித்தால் சுவையாதே!*
*முனிவு கொண்டு வாழ்வ தனால்*
*மூர்க்கனென்று பெயர் பெறுவாய்!*
*துணிந்து சொல்வேன் நண்பா கேள்,*
*"தூயசெயல்கள் தான் வெல்லும்!"*

அ.கௌரிதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத்தை நீ உருட்டு!

குடிப்பழக்கம் கூடிவிடின் குடிமுழுகிப் போகும் - மேலும்
குடித்தேநீ வாழுவதால் குடல்அழுகிப் போகும்!
குடித்தவர்கள் வாழ்ந்ததெனும் சரித்திரங்கள் இல்லை- உனைக்
குவலயமும் குறை கூறும் வாழும்வரை தொல்லை!

மாண்புடைய கல்விபெற்றும் மகத்துவங்கள் அருகும் - தினம்
மதியிழந்து வாடுவதால் மனக்கவலை பெருகும்!
காண்பவர்கள் உந்தனையே கணக்கெடுக்க மாட்டார் - நீ
கைநீட்டி இரந்தாலும் காசுதர மாட்டார்!

பிள்ளைகளும் அன்பாகப் பேசிடவும் வாரார் - உன்
பிரியமுள்ள மனைவியுமோ பிரியமுடன் சேராள்!
நல்லவர்கள் உனைக்கண்டு வெகுதூரம் போவார்! - நீ
நடைப்பிணமாய் வாழுநிலை கண்டுபிறர் நகுவார்!

கைப்பொருளும் உப்பெனவே நித்தமும் கரையும் - உடல்
களைப்புற்று, எழில்குன்றி வருத்தங்கள் நிறையும்!
தப்பான வழிசெல்லும் 'தறுதலை'யாய் ஆவாய் - இத்
தரணியினை விட்டேநீ விரைவினிலே போவாய்!

நித்தம்மது நீயருந்தி என்னசுகம் கண்டாய்?- உன்
நிகழ்கால வாழ்வினையே இருளாக்கிக் கொண்டாய்!
உத்தமனாய் வாழ்வதென்று உரோசத்தை திரட்டு- மது
உட்கொள்ளும் நிலைவிட்டு "உலகினையே உருட்டு"!

அ.கௌரிதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கச்சான் படுத்தும் பாடு!

மூசியடித் தோடிவரும் 'கச்சான் காற்று'
முகில்தழுவும் தருக்களையும் முறிக்கும் கூற்று!
வீசிவரும் விசைகூட்டி ராகம் பாடும்
வீடுகளின் முகடுகளைத் தூக்கி ஓடும்!

அரும்பு மலர் காய்பிஞ்சைப் பிய்த்து வீசும்
அயல்வளவின் சருகுகளை அள்ளிக் கொட்டும்!
துரும்பாக இளைத்தவரைக் தள்ளி வீழ்த்தும்
தூண்களையும் வேகமுடன் முட்டிச் சாய்க்கும்!

கிணற்றுடனே குளங்களையும் வற்றச் செய்யும்
கிடுகுவேய் வேலியையும் பற்றச் செய்யும்!
மணல் வீதி தனைக் கட்டாந் தரையாய் மாற்றும்
மண்ணள்ளிக் கண்களில் கொட்டித் தீர்க்கும்!

அ.கௌரிதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கான்மரங்கள் அனைத்தையுமே 'கரகம்' ஆட்டும்
கண்நோய்கள் பலதந்து துயரில் ஆழ்த்தும்!
வான்மழையும் வாராமல் ஆட்சி செய்யும்
வனப்புடைய ஆடவரை வாட்டிக் கொல்லும்!

வீதிகளில் கூளங்கள் பரப்பி வைக்கும்
வீட்டுக்குள் தூசுகளை நிரப்பி வைக்கும்!
சாதிமதம் இனமென்று பாரா வண்ணம்
சகம்வாழும் சகலரையும் சமனாய் எண்ணும்!

பூவாடை கமழுகின்ற கன்னிப் பெண்கள்
பூரிப்புக் கொள்ளுகின்ற (ம) கச்சான் காலம்!
பாவாடை அணிகின்ற பெண்ணைக் காற்றுப்
படுத்துகின்ற பாடுகள்தான் என்ன கோலம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளம் பெருக்க வழி!



புகைத்தல் பழக்கம் 'பட்ஜட்' டோடு
போனது எனை விட்டு - தினம்
தொகையாய் துண்டு விழுந்த வகை போய்
தங்குது சில 'துட்டு'!

இருமல் களைப்பு இதய வலிப்பு
இப்போ மிகக் குறைவு - என்
'திருமதி' தனக்கும் 'மழலைகள்' தமக்கும்
திருப்தி மன நிறைவு!

"ஓசிப்" புகைஞர் ஒட்டுவதில்லை
ஓடி விட்டார் தூரம் - கரைந்த
காசில் சிலதுளி மீண்டு மென்றன்
கைக்கு வரும் நேரம்!

ஆண்டொன்றுக்கு பல்லா யிரங்கள்
ஆமாம், முதல் இழந்தேன் - ஓடி
ஆண்டுகள் இருபது போன பின்னாலே
ஐயோ இதை உணர்ந்தேன்!

'மடையன்! என்றே வாழ்ந்ததில் எனக்கு
மனதில் ஒரு கவலை - புகை
கடனுக் கெல்லாம் அள்ளித் தந்த
'கடைஞர்' பெருங் கவலை!

வளத்தைச் சிதைத்து நோயை விலைக்கு
வாங்கிய நிலை போச்சு - மீண்டும்
"வளத்தைப் பெருக்கி வையம் மதிக்க
வாழ்ந்திட வழி யாச்சு!"

**அ.கௌரிதாசன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருமானின் ஆணைகள்

இவ்வுலகம் பொருளில்லார்க் கில்லை! - அந்த
இறையுலகம் அருளில்லார்க்(கு) இல்லை!
ஒவ்வொன்றும் இறையருளின் ஆணை! - நாம்
உயர்ஈசன் மீட்டுகின்ற வீணை!

கைபட்டால் எழுந்துவரும் நாதம்! அவன்
கைதீண்டா வேளையிலே மோனம்!
மெய், வாயை கண், மூக்கை செவியை - மேலும்
மிக அழகாய் படைத்தானே புவியை!

பிறப்புண்டு உண்டேதான் இறப்பு! - இது
புவிமீதில் அவன்செய்த வகுப்பு!
சிறப்புக்கள், சிந்தனைகள், செல்வம் - அவன்
சேர்த்து வைத்த வெற்றிகளின் சின்னம்!

தொடர்ந்து வரும் சிலகாலை இன்பம்! அவன்
தோற்றிடுவான் சிலவேளை துன்பம்!
கடவுளவன் கருணைக்கு ஒப்பு - இந்தக்
காசினியில் ஏதுண்டு, செப்பு?

ஆறேழு பிள்ளைகளும் தருவான்! - ஒன்றும்
அற்றதனி மலடாக்கி விடுவான்!
பேறுகளும் வெற்றிகளும் தோற்றும் - அந்தப்
பெருமானின் ஆணைகளே தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊன்றுகோல் தேவை!

உடலில் இப்போ வலுவில்லை ஒரு
"ஊன்று கோல் தேவை" - நிழற்
படமாய் நெஞ்சத் திரையில் தோன்றும்
பழைய என் வாழ்க்கை!

பணத்தின் திமிரால் பலபேர் வாழ்வைப்
பறிக்க முனைந் திட்டேன் - இனிய
குணத்தர் தம்மின் முகத்தில் நானும்
குத்த விழைந் திட்டேன்!

கன்னிப் பெண்கள் துடிக்க அவர்தம்
கற்பைப் பறித்திட்டேன் - நிதம்
சென்னி குளிர்ந்து சாதனை யென்றே
சிரித்து மகிழ்ந் திட்டேன்!

தந்தை தாயின் புத்தி மதியைத்
தள்ளி நடந் திட்டேன் - என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்த மனைவி தடுத்தும் தீய
செயல்கள் தொடர்ந் திட்டேன்!

ஆசை கொண்டு பலரின் தேட்டம்
அதையும் கவர்ந் திட்டேன் - தொகைக்
காசைக் காட்டி நீதி மன்றில்
வாகை அடைந் திட்டேன்!

குடியும் கூத்தியும் சொர்க்கம் என்றே
கூடிக் களித் திட்டேன் - கைத்
தடியின் துணையுடன் தரணி மீதில்
தள்ளாடி நடக் கின்றேன்!

எல்லாப் பிழையும் பொறுப்பாய் இறைவா
என்றே அழுகின்றேன் - அவன்
வல்ல கருணை வருமென் றெண்ணி
வாழ்த்தித் தொழு கின்றேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாகரிகத்தின் அடையாளச் சின்னங்கள்

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வமாய்
அகில உலகமே போற்றியது - இங்கு
உன்னையும் என்னையும் ஈன்றவர் மேலென
உயர்வாய் நினைத்து வாழ்த்தியது!

பள்ளிச் சீருடை புனைந்துமே செல்கையில்
பெற்றவர் மனங்கள் களிக்கிறது! - உயர்
கல்வியில் உயர்வினைக் கண்டிடும் காலையில்
கரையிலா மகிழ்வில் குளிக்கிறது!

ஈன்ற பொழுதினில் பெரிதே உவந்தவள்
சான்றோன் என்கையில் சிரிக்கின்றாள்! - நாளும்
ஊன்று கோலென உயர்த்திய தந்தையும்
உவகையில் ஆடி மகிழ்கின்றார்!

கண்ணிலும் மேலாய் காத்தவுன் பெற்றோர்
கடைசியில் முதியோர் விடுதியிலா? - புவி

அ.கௌரிதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னனாய் நீயும் மகுடமே சூடினும்
மறந்தாய் எனில், அவர் தலைவிதியா?

'பெற்றவர் மனங்கள் பித்து" எனச் சொன்னால்
"பிள்ளைகள் உள்ளம் கல்தானோ?" - உமைக்
கற்று உயர்த்திய கடவுளர் பெற்றோர்
கடைசியில் வாடுதல் மெய்தானோ?

நாகரி கத்தின் அடையாளச் சின்னங்கள்
நாட்டினில் முதியோர் இல்லங்களா? - இந்த
நானிலம் மீதினில் அவர்களை மறந்திடில்
நாமவர் பெற்றிட்ட செல்வங்களா?

அகில உலகிலும் முதியவர் தன்னையே
அன்பாய் மதித்துப் போற்றிடுவோம்! - வாழ்வில்
தகைமையில் உயர்ந்த தந்தை தாய் மேலென்று
தரணியில் என்றென்றும் சாற்றிடுவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டுக்குரியவர்கள்!

நீர்மூழ்கி முத்தெடுக்கும் தன்மை யோர்கள்
நிலந்தோண்டி இரத்தினங்கள் கொள்ளு வோர்கள்
பார்மீது மலையேறும் வித்தை கற் றோர்
பஞ்சுநிற மஞ்சுலவி ஊர்தி செல் வோர்
ஆழியிலே கப்பலினைச் செலுத்து வோர்கள்
அருங்களிறு தனைக்காட்டில் கட்டு வோர்கள்
மேழியினால் பொருப்புநிலம் உழுவோர் தாமும்,
மேன்மையுளோர் பாராட்டுக் குரியோராவார்!

கலட்டுத்தரை தனிற்பசுமை காணு வோர்கள்
காசினியில் களவு பொய் காணா தோர்கள்
இலட்சியத்துக் காயுதங்கள் ஏந்து வோர்கள்
இவ்வுயிரைத் துச்சமென எண்ணு வோர்கள்
துலங்கு மொரு வையகத்தைப் படைத்த பேர்கள்
துட்டனெனும் கெட்டபெயர் சூடா தோர்கள்
நிலம்மீது இறவாத பெயரைப் பெற்றோர்
நிச்சயமே, பாராட்டுக் குரியோராவார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணாசை பெண்ணாசை கொள்ளா தோர்கள்
மது புகையை எந்நாளும் எண்ணா தோர்கள்
பொன்னாசை தனைவிட்டோர்! புதுமை நெஞ்சம் -
பூதலத்தில் வாய்த்திட்ட புரட்சியாளர்!
எந்நாளும் சுயநலமே ஒட்டா தோர்கள்
எதிர்ப்புகளைக் கண்டுமனம் அஞ்சா தோர்கள்
நன்மைக்காய் வாழ்வதற்கே நாட்டம் மிக்கோர்
நானிலத்தின் பாராட்டுக் குரியோராவார்!

மக்களுயிர் காக்கின்ற மருத்து வர்கள்
மனம்நோகா விதம்நடக்கும் தாதிமார்கள்
தக்ககல்வி புகட்டுகின்ற ஆசான் மார்கள்
தரணியுயர் வுக்குழைக்கும் சேவையாளர்
வக்கணைகள் தான் கூட்டிப் பாடல் செய்யும் -
வண்டமிழிற் பற்றுடைய பாவல் லோர்கள்
எக்காலும் இறைபக்தி கொண்ட பேர்கள்
எல்லோரும் பாராட்டுக் குரியோராவார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகளிருக்கு அடிபணியும் இயற்கை!

பூத்திரியில் விளக்கேற்றிப்
பூரிக்கும் பாவையரைப்
புகழ்ந்தேற்றல் பூதலத்தார்
கடமை - பழஞ்
சாத்திரத்தை நம்பி நம்பி
சாவரையும் அடிமைகளாய்
சாகடிக்கும் செய்கைகளோ
கொடுமை!

நேத்திரங்கள் போலிருக்கும்
நேரிழையர் எல்லோரும்
நிலம் மீது ஆடவர்தம்
உடைமை! - வீட்டுப்
பாத்திரங்கள் தேய்கின்ற
பாத்திரமாய் பாவையரைப்
பாரினிலே நினைப்பது தான்
மடமை!

அடுப்படியில் முடங்குவதே
அரிவையர்கள் பணியென்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிமடையர் கூற்றெல்லாம்
பழைமை! - அவர்
படுக்கையறைப் பொம்மைகளாய்
பழங்காலம் வாழ்ந்த கதை
பகுத்தறிவால் வென்றிடுதல்
புதுமை!

பாரென்னும்
கோட்டையினைப்
பாட்டாலே ஆண்டகவி
பாரதியின் புரட்சியினைக்
கேளீர் - காணும்
ஆறென்ன கடலென்ன?
அகிலத்து இயற்கையெலாம்
அடிபணியும் ஆற்றலுக்கு
மகளிர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிந்தித்து வாக்களிப்பீர்!

*வாக்காளப் பெருமக்கள் வணக்கம்! உங்கள்*
*வாக்குகளின் பெறுமதியை விளங்கிக் கொள்வீர்!*
*பூத்துவரும் புலர்காலை நீங்கள் சென்று*
*போடுகின்ற 'புள்ளடி'யால் உங்கள் வாழ்வில்*
*மாற்றமொன்று நிகழ்ந்திடுமா? என்றே சற்று*
*மனத்திருத்திப் பாருங்கள் மறக்க வேண்டாம்!*
*தோற்றாலும் வென்றாலும் அவர்கள் வாழ்வில்*
*தொய்வுவர மாட்டாதே கவனம் நீங்கள்!*

*குளிர்கொட்டும் குடிசையிலே வாழும் நீங்கள்*
*கொடுக்கின்ற ஆதரவால் அவர்கள் மீண்டும்*
*குளிரூட்டப்பட்ட புது 'ஊர்தி' தன்னில்*
*'குஷி'யாகப் பயணிப்பார்! வாக்க ளித்தோர்*
*'பழங்குருடி கதவதனைத் திறநீ' என்னும்'*
*படியாக அவலநிலை காணல் திண்ணம்!*
*வழமையிது பிறந்தநாள் தொட்டு நீங்கள்*
*வாக்களித்து வாக்களித்துக் கண்ட தென்ன?*

*பாட்டனுக்கு முற்பாட்டன் என்று உங்கள்*
*பரம்பரையே 'சாவடி'க்குச் சென்று வாக்குப்*
*போட்டதுதான் கதையாச்சு! மாற்றம், மேன்மை*
*புலர்வுகளைக் கிஞ்சித்தும் தரிசித் தீரா?*
*மாட்சிமைகள் மிக்கவராய் அமைச்ச ரென்னும்*
*மகுடத்தை அவர்சூட மூலம் ஆனீர்!*
*வீட்டினிலே அடிசிலுக்கு வழியே யற்றீர்*
*விளக்கெரிக்க எண்ணெய்க்கு எங்கே செல்வீர்?*

அ.கௌரிதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிசி, மா சீனியுடன் பால்மா மற்றும்
அடுக்களைக்கு உண்டான பொருட்கள் ஆமாம்
எரிக்கின்ற விறகோடு சாமான் சட்டு
எல்லாமும் விலையேறும் வேளை எம்மைச்
சரிக்கட்ட மேடையிலே பலவா றாகச்
சாற்றுகின்றோர் நடிப்புக்கு மயங்கி டாமல்
உரிமையுள்ள பெறுமதியாம் வாக்குச் சீட்டை
உத்தமர்க்கே போடுங்கள் உலுத்தர் வேண்டாம்!

பாலமுடன் மின்சாரம் 'பைப்பு'த் தண்ணீர்
பயணிக்க வீதிகளும் தருவே னென்று
காலமெலாம் மேடையிலே உரைப்போர் தம்மின்
கதைகேட்டு விலைபோக வேண்டாம் மக்கள்!
காலையிலே ஒன்றுரைத்து மதியம் ஒன்றாய்
கங்குலிலே வேறுகதை பேசும் கு(க)ள்ளர்
நாளையென்ன நமக்கிங்கே செய்யப் போறார்?
நடைபெற்றால் தேர்தலது தம்பி வேறாள்!

மூளைகெட்டு வாழுகின்ற மூடர் என்று
முழுநாளும் நினைக்கின்றோர் விருப்பம் போல
ஏழைகளை எடுத்தெறிந்து பேசு கின்ற
ஏமாற்றுக் காரர்களை இனங்கா ணுங்கள்!
கோழைகளாய் கொத்தடிமை நிலையி லின்னும்
கோடியிலே வாழுகின்ற வாழ்வை மாற்ற
நாளைவரும் தேர்தலெனும் வேளை பார்த்து
நன்றாகச் சிந்தித்தே வாக்க ளிப்பீர்!

அ.கௌரிதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் பாட்டு!

புவியெனக்கு இட்டபெயர் மூடன் - நான்
புகழ்பூத்த பாரதிக்குச் சீடன்
கவிதீட்டல் எந்தனது நோக்கு - யார்க்கும்
கைகட்டி வாழாத போக்கு!

சத்தியத்தைச் சென்றடையும் பாதை - பாரில்
சமத்துவத்தை விதைப்பதுவென் போதை
நித்தமுமே, பொதுநலனே தொண்டு - நான்
நினைப்பதெலாம் எழுதிடுவேன் நன்கு!

காதையது எதிர்காலம் காட்டும் - நாளும்
கவலை துயர் தனைக்களைந்து ஓட்டும்
மாதை, மதி மலர்களினைப் பாடும் - என்
மனம்வான வெளியினுக்கும் ஓடும்!

சாதிக்குச் சாவுமணி அடிக்கும் - பாட்டை
சந்ததிகள் எதிர்காலம் படிக்கும்
நீதியினை மறந்தாரை முடிக்கும் - நல்ல
நிலைதோற்ற எரிமலையாய் வெடிக்கும்!

உரம் சேர்க்கும் இனியதமிழ்ப் பாட்டு - என்றும்
உண்மைக்குப் போடாது பூட்டு
நிரந்தரமாய் உயிர்வாழும் பாட்டு - அதை
நிச்சயமாய் புவிபுகழும் கேட்டு!

அ.கௌரிதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராளுமன்றத்துப்
## படியேறும் ஆசை!

பாராளு மன்றத்துப் படியேறும் ஆசையினால்
பலநூறு வாக்குறுதி அளித்தார்! - அவர்
'தாராக மணல்வீதி தனைமாற்றித் தந்திடுவேன்'
தாருங்கள் வாக்கென்று உரைத்தார்!

நேராக ஓராண்டு மறையுங்கால் தம்சேவை
நிலைமாறும் நிலைகண்டு கொள்ளார்!- எதிர்
மாறாக, வாக்கிட்டு "எம்.பி" ஆக்கியவர்
மனம்நோகும் விதமாக உள்ளார்!

ஒலிவாங்கி முன்னின்று உயிர்கூட, தூசியென
ஒலித்தகுரல் யாவையுமே மறந்தார்! - பலர்
கலிகொள்ளும் விதமாக காரியங்கள் செய்ததுடன்
கஞ்சல்களை அயலுக்கு அழைத்தார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனதூரைக் கைவிட்டு உறவோடு ஒயிலாக
தலைநகரில் குடியேறி மகிழ்ந்தார்! - இவர்
பிணம்நூறு விழுந்தாலும் புயல்வந்து அடித்தாலும்
பேசாமல் மௌனியென வாழ்ந்தார்!


மெய்ப்பாது காவலரின் மேலாக கவனிப்பில்
மேடைகளில் உரையாற்றிச் செல்வார்! - கட்சி
செய்துள்ள சேவைகளை சிறப்புகளை மெருகூட்டிச்
செந்தமிழில் சுவைபடவே சொல்வார்!

உல்லாச விடுதியிலே இல்லாத சுகம்கண்டு
உலகத்தைச் சிலநேரம் மறப்பார்! - குண்டு
பொல்லாத கார்கள்தரும் குளிரூட்டப் பட்டசுகப்
பூரிப்பில் மெய்மறந்து சிரிப்பார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஆலங்கேணி கிழக்கின் அற்புதக் கவிஞன்
அம்பலவாணர் கௌரிதாசனை கவிதை
மூலம் நெடு நாட்களாக நானறிவேன்.
மரபுவழிக் கவிதை எழுதுவதில் அவர்
வல்லவர். அவரது கவியரங்கக் கவிதைகள்
எளிமையாகவும், அழகாகவும், ஆர்வத்தைத்
தூண்டுவதாகவும், கேட்போரை
உற்சாகப்படுத்துவதாகவும் அமையும்.
சொற்பஞ்சமில்லாத சந்தக் கவிஞனாகவும்
எங்களது முன்னோர்களான புலவர்களின்
வழித்தோன்றல்களில் நயந்து
திளைப்பதற்குரிய கவியாற்றல்
கொண்டவர்களில் ஒருவராகவும் நண்பர்
கௌரிதாசனை நான் பார்க்கிறேன்.
கவிஞனுக்கு ஓய்வில்லை என்பதனை
நிரூபிக்கும் ஒருவரிவர். தொடர்ந்தும் இவரது
கவிதை நூல்கள் வெளிவரட்டும் மக்கள்
நலனை ஓம்பச் செய்யட்டும்.

அன்புடன்.

நந்தினி சேவியர்.

16.11.2014

**Price: 300/=**

PENA PUBLICATION

9 789550 932115

Design & Print: AMRA GRAPHICS & PRINTERS, Kinniya 0775153943

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org